உ

கடவுள் துணை

குகைநமசிவாயதேவரியற்றிய

அருணகிரியந்தாதி

மூலமும்

வே. ஆறுமுகமுதலியாரவர்கள் இயற்றிய

பொழிப்புரையும்.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1938 [அணா 4

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

குகை நமசிவாயதேவர் சரித்திரம்

மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவஸ்தல யாத்திரை செய்துவருகிறேனென்று தமது குருவின் அனுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தமது குருவுருவாக எழுந்தருளிய அண்ணாமலையார் சொற்படி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுட னிருந்த கன்னடமூர்த்தியாகிய குகைநமசிவாயதேவர், அவ்வண்ணாமலையார் வரப்பிரசாதத்தினாலே அவரை இவ்வருணகிரியந்தாதியாற் றோத்திரஞ்செய்துகொண் டிருந்து மலபரிபாகம்பெற்ற குகைநமசிவாயதேவர் முதலிய சிஷ்யவர்க்கங்களுக்கு தனது அனுபவஞான மாகிய சிவஞானத்தை நன்குபதேசித்து இனிது விளங்கிக்கொண்டிருந்தனர்.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

ஶிவாஷ்டோத்திர ஶதநாமங்கள்

ஓம் ஶிவாயநமஃ
ஓம் மஹேஶ்வராயநமஃ
ஓம் ஶம்பவேநமஃ
ஓம் பிநாகிநேநமஃ
ஓம் ஶஶிஶேகராயநமஃ
ஓம் வாமதேவாயநமஃ
ஓம் வ்ருஷபாக்ஷாயநமஃ
ஓம் கபர்த்திநேநமஃ
ஓம் நீலலோஹிதாயநமஃ
ஓம் ஶங்கராயநமஃ 10
ஓம் ஶூலபாணயேநமஃ
ஓம் கட்வாங்கிநேநமஃ
ஓம் விஷ்ணுவல்லபாயநமஃ
ஓம் ஶிபிவிஷ்டாயநமஃ
ஓம் அம்பிகாநாதாயநமஃ
ஓம் ஸ்ரீகண்டாயநமஃ
ஓம் பக்தவத்ஸலாயநமஃ
ஓம் பவாயநமஃ
ஓம் ஸர்வாயநமஃ
ஓம் த்ரிலோகேஶாயநமஃ 20
ஓம் ஶிதிகண்டாயநமஃ
ஓம் ஶிவாப்ரியாயநமஃ
ஓம் உக்ராயநமஃ
ஓம் கபர்த்திநேநமஃ
ஓம் காமாரயேநமஃ
ஓம் அந்தகாஸுரஸூதநாயநமஃ
ஓம் கங்காதராயநமஃ
ஓம் லலாடாக்ஷாயநமஃ
ஓம் காலகாலாயநமஃ
ஓம் க்ருபாநிதயேநமஃ 30
ஓம் பீமாயநமஃ
ஓம் பரஶுஹஸ்தாயநமஃ
ஓம் ம்ருகபாணயேநமஃ
ஓம் ஜடாதராயநமஃ
ஓம் கைலாஸவாஸிநேநமஃ
ஓம் கவசிநேநமஃ
ஓம் கடோராயநமஃ
ஓம் த்ரிபுராந்தகாயநமஃ
ஓம் விருஷாங்காயநமஃ
ஓம் விருஷபாரூடாயநமஃ 40
ஓம் பஸ்மோத்தூளிதவிக்ரஹாய
நமஃ
ஓம் ஸாமப்ரியாயநமஃ
ஓம் ஸோமாயநமஃ
ஓம் த்ரயீமூர்த்தயேநமஃ
ஓம் அநீஶ்வராயநமஃ
ஓம் ஸர்வக்ஞாயநமஃ
ஓம் பரமாத்மநேநமஃ
ஓம் ஸோமஸூர்யாக்னிலோச
னாயநமஃ
ஓம் ஹவிஷேநமஃ
ஓம் யக்ஞமயாயநமஃ 50
ஓம் ஸோமாயநமஃ
ஓம் பஞ்சவக்த்ராயநமஃ
ஓம் ஸதாஶிவாயநமஃ
ஓம் விஶ்வேஶ்வராயநமஃ
ஓம் வீரபத்ராயநமஃ
ஓம் கணநாதாயநமஃ
ஓம் ப்ரஜாபதயேநமஃ
ஓம் ஹிரண்யரேதஸேநமஃ

ஓம் தூர்தர்ஷாயநம:
ஓம் கிரீஶாயநம: 60
ஓம் கிரிஶாயநம:
ஓம் அநகாயநம:
ஓம் புஜங்கபூஷணாயநம:
ஓம் பர்காயநம:
ஓம் கிரிதன்விநேநம:
ஓம் கிரிப்ரியாயநம:
ஓம் க்ருத்திவாஸஸேநம:
ஓம் புராராதயேநம:
ஓம் பகவதேநம:
ஓம் ப்ரமதாதிபாயநம: 70
ஓம் ம்ருத்யுஞ்ஜயாயநம:
ஓம் ஸூக்ஷ்மதநவேநம:
ஓம் ஜகத்வியாபிநேநம:
ஓம் ஜகத்குரவேநம:
ஓம் வ்யோமகேஶாயநம:
ஓம் மஹாஸேநஜநகாயநம:
ஓம் சாருவிக்ரஹாயநம:
ஓம் ருத்ராயநம:
ஓம் பூதபதயேநம:
ஓம் ஸ்தாணவேநம: 80
ஓம் அஹிர்புத்ணியாயநம:
ஓம் திகம்பராயநம:
ஓம் அஷ்டமூர்த்தயேநம:
ஓம் அநேகாத்மநேநம:
ஓம் ஸாத்விகாயநம:
ஓம் ஶுத்தவிக்ரஹாயநம:
ஓம் ஶாஶ்வதாயநம:
ஓம் கண்டபரஶவேநம:
ஓம் அஜாயநம:
ஓம் பாஶவிமோசகாயநம: 90
ஓம் ம்ருடாயநம:
ஓம் பஶுபதயேநம:
ஓம் தேவாயநம:
ஓம் மஹாதேவாயநம:
ஓம் அவ்யயாயநம:
ஓம் ஹராயநம:
ஓம் பகநேத்ரபிதேநம:
ஓம் அவ்யக்தாயநம:
ஓம் தக்ஷாத்வரஹராயநம:
ஓம் ஹராயநம: 100
ஓம் பூஷதந்தபிதேநம:
ஓம் அவ்யக்ராயநம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாயநம:
ஓம் ஸஹஸ்ரபதேயநம:
ஓம் அபவர்க்கப்ரதாயநம:
ஓம் அனந்தாயநம:
ஓம் தாரகாயநம:
ஓம் பரமேஶ்வராயநம: 108

ஓம் நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

ஶிவாஷ்டோத்திர ஶதநாமங்கள்

முற்றுப்பெற்றன.

கடவுள் துணை

அருணகிரியந்தாதி

மூலமும்—உரையும்

காப்பு

விநாயகர் துதி

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்குங்—கொத்தி
அரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்.

இ-ள். ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் இரணிய சம்மார நிமித்தம் கற்றூணில் நரசிங்கமாயுதித்து அவ்விராட்சதனுடைய மார்பைப்பிளந்து உதிரத்தைக்குடித்து வெறிகொண்டு லோகாலோகங்களையெல்லாம் அதம்பண்ண எத்தனித்தகாலத்தில் சார்த்தூலபட்சியாய் அவதாரஞ்செய்து நரசிங்கத்தைப் பிளந்து வைகுந்தத்துக் கனுப்பிய அருணசல ஈஸ்வரர் புத்திராகிய யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைத் தொழுதவர்களுக்குக் காரியசித்தியும் நல்லபுத்தியும் இலட்சுமி கடாட்சமும் தெய்வபக்தியும் மெய்ஞ்ஞானமும் உண்டாகும் என்றவாறு. 1

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்காணுப்பெருமை
ஆர்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்—சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வையா நீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால்.

இ-ள். மேகம்போன்ற திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவும் தாமரைமலரிலுதித்த பிரமதேவனும் காணுதற்கு அரிதாகிய உமது பெருமையை இப்பூமியின்கண் உள்ளவர்களில் யார் அறிந்து துதிக்கவல்லவர்கள்? கைலையையொத்த திருவண்ணமலையில் எழுந்தருளிய ஐயனே! நீர் கிருபை செய்யாவிடில் எ-று. 2

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே—மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரித்
தேசிகனே நீகண்டாய் திக்கு.

இ-ள். திருப்பாற்கடலிலுதித்த விஷத்தையுண்ட நிர்மல ஸ்வரூபனே! மூர்த்திகளுக்கு மேலாகிய கடவுளே! மாணிக்கமலையென்னும் அருணாசலத்திற்கு அதிபனே! சராசரங்களை அன்போடு இரட்சிக்குந் தயாபரனே! காலையில் நல்ல மலர்களைக்கொண்டு பக்தியுடனே உமது பாதாரவிந்தத்தைத் துதிக்கத்தக்க அறிவில்லாத எளியேனுக்கு உம்மையல்லாமல் வேறு திக்கு உண்டோ? இல்லை எ-று. 3

திக்குவே றில்லை திருவுளமே யல்லாமல்
இக்குவே ளைக்காய்ந்த வீசனே—மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு.

இ-ள். கரும்பை வில்லாக வளைத்துச் சராசரங்களை மயக்கும் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த அருணாசலக்கடவுளே! திருப்பாற்கடலிலெழுந்த விஷத்தை யமுதம்போலுண்ட காலகாலனே! அடியேனுக்கு உம்மையல்லாமல் வேறு திக்குண்டோ? சொல்லு எ-று. 4

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா—மாசிலா
அண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணாம லையாகண் பார்.

இ-ள். மெய்யன்போடு துதிப்பவர்களுடைய பிறவித்துன்பத்தை மாற்றுவாரென்று இப்பூமியின்கண்ணுள்ள புண்ணியவான்கள் புகழும் அருணாசலக்கடவுளே! இதுவரையிலும் பிறவித்துன்பத்தில் உழன்ற அடியேனை இனியாவது தாய்வயிற்றில் உருப்படுத்தாத கிருபாநோக்கஞ் செய்யும் எ-று. 5

பாராம னீயிருந்தாற் பார்மீதி லுய்யேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே—தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே சூழ்ந்த
இறப்பை யகற்றுதற்கு மின்று.

இ-ள். மூடனுகிய அடியேன்பேரில் தேவரீர் கடாட்சம்வைத்து இரட்சியாவிடில் இப்பூமியில் என்னை இரட்சிப்பவர் உண்டோ? இல்லை. திருவண்ணு மலையில் வாசஞ்செய்யுங் கர்த்தனே! பிறப்பிறப்பு என் னுஞ் சமுத்திரத்தில் அடியேன் மூழ்காவிதம் அருள் செய்யும் எ-று. 6

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்றுதமி யேனை நெருக்காமல்—நன்றிதரும்
ஆரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைந்தக் கால்.

இ-ள். அடியேனைப் பற்றியிருக்கும் இருவினை யென்னும் நல்வினை தீவினையும் மும்மலமென்னும் ஆணவம் மாயை காமியமும் எளியேனை வருத்தாமல் இன்றே நீங்காதோ? நல்ல குளிர்ச்சிபொருந்திய கங் கையைச் சடாமகுடத்தில் தரித்த அருணசலக்கட வுளே! ஸ்ரீமகாவிஷ்ணுவும் பிரமதேவனும் காணு தற்கு அரிய கர்த்தனே! தேவரீர் கிருபாநோக்கஞ் செய்தால் எ-று. 7

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
ஆல முகந்த வருணேசன்—கோலத்தை
நேசமுற்று நீகருதி னீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன்.

இ-ள். அஞ்ஞானம் பொருந்திய எனது நெஞ் சமே! நீ இயமனுக்குப் பயப்படவேண்டிய காரண மென்ன? விஷத்தையுண்ட அருணசலக்கடவுளைப் பக்தியுடனே துதித்தால் உன்னைவிட்டு நீங்காமல் வருத்தும் பாசபந்தங்களை யறுப்பார் எ-று. 8

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்—வரங்கேட்ட
என்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு.

இ-ள். பரமேஸ்வரன் நீயேயென்று பக்தியோடு தண்டனிட்டுத் தோத்திரஞ்செய்து இருகரங்களையும் சிரசின்மேல் கூப்பி, இரண்டு கண்களிலும் ஆனந்த வெள்ளம் பொங்கிநின்று அடியேன் ஆசையோடு கேட்ட வரங்களையெல்லாம் கருத்தின்படியே கொடுத்தீர்; அருணாசலத்தில் வசிக்கும் என் ஐயனே! இதற்கு என்னால் செய்யப்பட்ட பிரதியுபகாரம் ஒன்றும் காணேன் எ-று. 9

மாறுகொண்ட தக்கன் மனோரதமெல்லாந் தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா—ஆறுகொண்ட
செஞ்சடையாய் நின்னைத் தெரிசித்தல் வேண்டுமென்
பஞ்சடையா முன்னே பரிந்து. [கண்

இ-ள். உம்முடைய மகிமை யறியாமல் விரோதங் கொண்ட தக்கனுடைய எண்ணங்களைக் கெடுத்து வெற்றிபெற்ற அண்ணாமலையானே! கங்காதேவியைத் தரித்த சிவந்த சடாமகுடத்தை யுடையவனே! வயது முதிர்ந்து என் கண்கள் பஞ்சடையாமுன்னம் தேவரீரைப் பக்தியுடனே கண்டு தரிசிக்க வேண்டும் எ-று. 10

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்தீக் கண்ணும்
அரிந்தசிர மாலை யழகுந்—தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்குமரு ணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து.

இ-ள். நம்மை வருத்துகிற கொடிய வினையை அகற்றும் அருணாசலக்கடவுளின் உருவம் எப்படி யெனில்? பிரகாசத்துடனே யணிந்த வெண்ணீறும் நாகாபரணமும் அக்கினிக்கண்ணும் உருத்திரர்களால்

அறுத்துக் கோத்த சிரமாலையும் பொருந்தியதாம், அதைக்கண்டு மனமே! நீ துதிப்பாய் எ-று. 11

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணுத
கோலங் குருவடிவு கொண்டேதான்—ஆலந்
தரித்தபிரான் சோணேசன் முன்முனிந்து வேளை
எரித்தபிரான் வந்தா னிதென்.

இ-ள். அஞ்ஞானம் பொருந்திய என் மனமே! பிரமாவினாலும் விஷ்ணுவினாலுந் தேடிக் காணுதற்கு அரியவரும் திருப்பாற்கடலிலெழுந்த காளகூட விஷத்தைக் கண்டத்தில் தரித்தவரும், மன்மதனை எரித்தவருமாகிய அருணாசலக்கடவுள் குருவடிவு கொண்டு வந்தது என்ன காரணம்? எ-று. 12

என்ன தவப்பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமறை காணுத முக்கண்ணா—நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரித் தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன்.

இ-ள். நான்கு வேதங்களும் தேடிக் காணுதற்கு அரிய அருணாசலக்கடவுளே! ஏழையாகிய நான், முன் ஜன்மத்தில் என்ன புண்ணியஞ் செய்தேனோ? தேவரீரை ஆசையோடு தேடுதற்கும், தேவரீரது கீர்த்தியைத் துதித்தற்கும் ஏதுவாகிய பலனைப் பெற்றேன் எ-று. 13

பெற்றோம் பலனைப் பிறந்ததனு னெஞ்சமே
அற்றோ மனத்தி லனவரதம்—பற்றுவார்
உள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக்கொண் டாட வரம்.

இ-ள். மனமே! நாம் இந்த மானிடஜனனம் எடுத்ததால் மெய்யன்போடு துதிப்பவர்களது தீவினையை யகற்றும் அருணாசலக்கடவுளைத் துதிக்க வரம் பெற்றோம் எ-று. 14

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கும்—உரம்பலிக்குஞ்
சோணு சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணர் கருத்தென் கருத்து.

இ-ள். அஞ்ஞானத்துக்கு இடமாகிய என்மனமே! அருணசலக் கடவுளைத் துதித்தால் நினைத்த வரமும், மெய்ஞ்ஞானமும், நீடித்த வாழ்வும், நல்ல புத்தியும், இலட்சுமிகடாட்சமும், தைரியமும் உண்டாகும் எ-று.

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
இருத்தி நினைப்பாரை யென்றும்—வருத்துமோ
நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு.

இ-ள். ஸ்ரீ கைலாசபதியாகிய அருணசலக்கடவுளுடைய தாமரைமலரை யொத்த இரண்டு பாதங்களையும் மனத்திலிருத்தித் துதிப்பவர்களை, எழுவகைத் தோற்றமாகிய சீவராசிகளைத் தொடர்ந்து பிறப்பிக்கும் பிறவி நோயானது வருத்துமோ? எ-று. 16

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரும்
என்புருக்கொள் பெண்ணு யிருக்குமே—அன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம்.

இ-ள். பூமியிலுள்ள அன்பர்களுக்கு குருமூர்த்தமாகிய மெய்ஞ்ஞானம் உபதேசிக்கும் அருணசலக் கடவுளுடைய அடியார்களின் மூவராகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் மகான்களுடைய திருப்பாடலைக் கேட்டால் சமுத்திரத்திலிட்ட கருங்கல் மிதந்து கரையேறும்; முதலை விழுங்கிய பிள்ளை பிழைத்துவரும்; எலும்புகள் பெண்ணுருவாய் எழுந்திருக்கும் எ-று. 17

பரமனரு ணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோம்—அருமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
ஆட்டுத் தலையாகை யால்.

இ-ள். பரப்பிரம்ம சொரூபியாகிய அருணாசலக் கடவுளின் பாதாரவிந்தங்களைத் தியானஞ் செய்யாதவர்கள் செய்யுங் கருமம் சிதையுமென்பதைப் பிரத்தியட்சமாகக் கேட்டிருக்கிறோம். அதேனெனில் கர்வத்தினால் அவரை மதியாமல் யாகஞ்செய்த துன்மார்க்கனாகிய தக்கன் சிரத்தையிழந்து ஆட்டுத்தலை பெற்றதால் எ-று. 18

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சாலவெருண் டோடுஞ் சமயத்தில்—ஓலமென
நின்றா னுலகறிய நேசமடி யாரிடத்துக்
குன்றாத சோணகிரிக் கோ.

இ-ள். சமுத்திரத்தில் ஆலகாலவிஷம் பரவி வருவதைக்கண்டு, தேவர்களெல்லாம் நடுநடுங்கிப் பயந்தோடி முறையிட்ட காலத்தில், அவ்விஷத்தைத் தமது திருக்கரத்தா லெடுத்துப் புசித்து நின்றார். அடியார்களிடத்தில் பரிபூரண கடாட்சம்வைத்த அருணாசலக் கடவுள் எ-று. 19

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ணன்
ஓடி வடவா லுறங்குமே—நாடுங்கால்
அக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும்.

இ-ள். கோடி பிரமாக்கள் பிறந்து ஒவ்வொருத்தர் தெய்வவருஷத்தில், நூறாயிர வருஷம் தமது தொழில்களை நடத்தியிறந்தால், தாமரைமலரை யொத்த கண்களுடைய ஸ்ரீமகாவிஷ்ணு சென்று வடவிருட்சமான ஆலவிருட்சத்தினிலையில் பள்ளிகொள்வார். அது

போல, கோடி மகாவிஷ்ணுக்கள் அழிந்தால் நக்கனெனும் அருணாசலக்கடவுள் சற்றுநேரம் புன்னகை செய்வார் எ-று. 20

தகுமானை யேந்தருணை நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி னாயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது.

இ-ள். புன்னகையையுடைய மானெனும் பார்வதியை இடப்பாகத்திற்றரித்த அருணாசலக்கடவுளே! பிறப்பென்னும் ஊசலிற் புகும் அடியேனை அவ்வழியிற் புகுதாமற் காக்கும் சிவகாருண்ணியனே! இவ்விடத்தில் எனக்கு நெருங்கியதுணை நீயல்லாமல் பெரிய உலகத்தி னிடத்திலுள்ளவர்களில் யார்? நீ சொல்வாய் எ-று. 21

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணாசலனை
ஓதக் கடனெஞ்சே யோதினாற்—பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங் கரையேற லாம்.

இ-ள். மூடத்துவம்பொருந்திய என் மனமே! சொல்லுதற்கரிய சமுத்திரத்தி லுற்பவித்த விஷத்தைப் புசித்த அருணாசலக்கடவுளைத் துதிப்பாயாக. அப்படித் துதித்தால் அவருடைய திருப்பாதங்களைக் காணலாம்; நமது பிணி மூப்பு சாக்காடு என்னும் மூவுபாதிகளையும் நீக்கலாம்; முத்தியாகிய கரையேறலாம். எ-று. 22

ஆமென்று நம்பி யநுதினமும் போற்றினால்
நாமென்று பற்றி நலமாகக்—காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை.

இ-ள். அஞ்ஞானம்பொருந்திய என்மனமே! திருவண்ணாமலையி லெழுந்தருளியிருக்கும் அருணாசலக்

கடவுளைப் பரப்பிரமமென்று பத்தியுடனே எந்நாளுந் துதித்தால் அப்பெயர்க்குரியவன் நானேயென்று எதிர்ப்படுவர். அதனால் நமது கொடியவினை நீங்கிப் போம் எ-று. 23

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
ஐயரடி யார்பாட்டிற் கல்லாமற்—றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய்.

இ-ள். கொடிதாகிய பிறவித்துன்பத்தை வேரோடு களையும் அருணாசலக்கடவுளது அடியார்கள் பாடல்களுக்கல்லாமல் முதலைவாயிலகப்பட்ட பிள்ளை உயிர்த்தெழுமோ? சமுத்திரத்திலிட்ட கருங்கல் மிதந்து கரையேறுமோ? ஆண்பனை காய்க்குமோ? எ-று. 24

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயினுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்
தோடி நமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடி நம வென்றே நட.

இ-ள். (சுகதுக்கத்துக்கிடமாகிய) மனமே! சரீரந் தளர்ந்து வருத்தமடையாததற்கு முன்னும், கண்களொலி குறையாமுன்னும், வாயிலுண்டாகிய பற்கள் குறைந்து அசையாததற்கு முன்னும், தமது திரேகத்தைக் கண்டு எமன் நெருங்காமுன்னும், அருணாசலக் கடவுளைத் துதித்து எதிர்கொள்வாய் எ-று. 25

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
அடக்கும் வகைசற் றறியார்—தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம்.

இ-ள். தங்கள் நடக்கையா லுண்டாகிய உயர்ந்த குலமும் நிறைந்த கல்வியும் நாமே பெற்றோமென்பார்.

ஆசையெனுந் துக்கமதை யடக்கவறியார், தாங்கள் கற்ற நூல்கள் அருணாசலக்கடவுளின் தாமரைமலரை யொத்த பாதங்களைக் காட்டுமோ? உயர்ந்த குலமும் அவருடன் சேர்க்குமோ? சொல்வீர் எ-று. 26

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராளுலு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.

இ-ள். உயர்ந்த குலத்தைப் பெருதவர்களானாலும், நல்ல புத்தியில்லாதவர்களானாலும், கல்வியில்லாதவர்களானாலும் நன்றே. சொல்லுதற்கரிய திருவருணையைவலம் வந்து அருணாசலக்கடவுளுக்கு அடியாரானல், அவர்களே வேதசாஸ்திரங்களை யுணர்ந்த அந்தணர்களுக்கு மேலான பெரியோர் எ-று. 27

பேரும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவார்
ஆரும் பரவு மருணேசன்—சீரை
உறக்கத் திலுமறக்க வொண்ணு துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின்.

இ-ள். கீர்த்தியையும் மிகுந்த செல்வத்தையும் புத்திரர்களை வேண்டி வருந்துபவர்கள் அந்த ஆசையை நீக்கி, வேதத்தின் பொருளையறிந்த தபோதனர் முதலிய சகலருந் துதிக்கும் அருணாசலக்கடவுள் புகழை நித்திரையிலும் மறவாமல் சிந்திப்பாரானல், பிறப்பிறப்பை நீக்கி மோட்சத்தை யடைவார் எ-று. ()

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
என்னறியேன் சோணகிரி யீசனே—நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றென் கருத்து.

இ-ள். சதுர்யுகத்திலு மழிவில்லாத அருணுசலக் கடவுளே! அறிவில்லாதவனுகிய யான் பூர்வ சனனங் களையுமறியேன்; இனிமேலுண்டாகுஞ் சனனத்தையு மறியேன்; தேவரீரைப் பாமாலைகளைக்கொண்டு துதிக் கவு மறியேன்; உமது கிருபாகடாட்சம் அறிந்து சொல்லஅரிதாயிருந்தாலும் திவ்வியமங்கள சொரு பத்தின் பெருமையாவது இன்னதென்று குறியாது என்னுடைய நெஞ்சம் எ-று. 29

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
எருத்தில்வருஞ் சோணகிரி யீசா—பருத்த
அலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு.

இ-ள். நல்ல புத்தியுடைய அடியார்கள் கண்க ளாற் கண்டு தரிசிக்க, வெண்மைநிறமுள்ள ரிஷபத் தின்மேல் ஏறிவரும் அருணுசலயீசனே! மிகுந்த அலங்காரத்தையுடைய நான்கு வேதத்தையும் உணர் ந்த பிரமனது ஐந்து சிரசில் ஒரு சிரசை நீர் மனக் கிலேசமில்லாமல் அறுத்தீர் எ-று. 30

கண்டுமிணை யென்பார் கருத்துநா வும்வாழி
அண்டர்கோ வேயருணை யண்ணலே—விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாத்துமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம்.

இ-ள். பக்தர்களாகிய பெரியோர்கள் தேவரீரது திருவிளையாட்டைக் கண்களாற்கண்டாலும், இன்னுங் காணவேண்டுமென்னும் விருப்பத்தால் கண்டதில்லை யென்பார். இவர்களையொத்த பெரியோர்களது கருத் தையும் நாவையும் ஆலயமாகக்கொண்ட தேவ தேவனே! அண்ணுமலையீசனே! வெண்மைநிறமுள்ள சங்கைத் தரித்த ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் தாமரை மலருக் கொப்பாகிய கண்களிலொன்றைத் தேவரீரது

பாதத்தில் சாத்தியிருக்கிற உமது சிவந்தகரத்தில
பிரமகபாலம் எதிர்கொண்டீர் எ-று. 31

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
அருமா மறைதேடு மண்ணல்—வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேசன்
இனிக்கூட்டான் றுன்பத் தெமை.

இ-ள். சிரமாலையணிந்து ரிஷபவாகனத்தின் மேல் விருப்பத்தோடேறும் அரிதாகிய நான்கு வேதங் களுந் தேடப்பட்ட சர்வேசன், மகாதவத்தைப்பெற்ற முனீஸ்வரர்கள் தோத்திரஞ் செய்யும் அருணசலக் கடவுள் எங்களைத் துக்கசாகரத்திலே அலையவிடார் எ-று. 32

எமையாளுஞ் சோணகிரி யீசா நின் பாகத்
துமையாளு நீயு முகந்த—சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
இருக்குங் கருணைசெய்வா யென்று.

இ-ள். எங்களை அடிமைகொண்டாளும் அருண சலக்கடவுளே! உமது இடப்பாகத்தில் அமைந்திருக் கும் உமையவளும், தேவரீரும் சந்தோஷத்துடனிருக் கும் அலங்காரத்தை மூடனாகிய யான் கண்களாற் காண இச்சித்தேன்; கடாட்சஞ் செய்வீர் எ-று. 33

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்—சென்று
திரிந்தேன் பலமருத்து தின்றுசில காலம்
இருந்தே னிராமலிருந் தேன்.

இ-ள். எப்போதும் அருணசலக்கடவுளது இர ண்டு பாதங்களையும் நம்பி துதியாதபேர்கள் துறவடை ந்து, மலையிலுங் காட்டிலுங் குகையிலும் போய்த் திரி ந்தாலென்ன? அநேக ஔஷதங்களான இலைசருகு களைப் புசித்து சிலகாலம் உயிரோடிருந்தாலென்ன? இராமலிருந்தாலென்ன? பிரயோசன மொன்றுமில்லை எ-று. 34

ஏனமனந் தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவாம்—ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணூர் கரு.

இ-ள். ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பன்றியாகவும், பிர்மாவானவர் அன்னமாகவும் ரூபங்கொண்டு இணையில்லாத அடியையும் சிறப்புற்றோங்கிய முடியையும் கற்பகோடி காலந்தேடியும் அவர்களுக்குப் புலப்படாமல் நின்ற அழலையொத்த திருமேனியையுடைய அருணசலக்கடவுளது பாதாரவிந்தங்களைக் கண்டுதரிசித்தவர்கள் பிறப்பிறப்பென்னு மூசலில் வருந்தார்கள் எ-று. 35

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மான்—ஒருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர்.

இ-ள். கறுத்த மேகத்தையொத்த திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவும், தாமரைமலரி லுதித்தெழுந்த பிர்மாவும், தேடுதற்கரிய பெருமானும், ரிஷபவாகனத்தின்மேலேறும் மகாதேவனும், மான்மழுவேந்தும் காலகாலனுமான அருணசலக்கடவுளது மெய்யடியார்களைக்கண்டு துதிப்பவர்களுக்குத் துயரமுண்டோ? இல்லை எ-று. 36

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பில்
அயர்கின்ற நாயேற்கு மாமோ—உயர்தவத்தோர்
ஆரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு.

இ-ள். துன்பத்தைக் கொண்டு எந்நாளும் அழியாத பிறவிக்கடலிலே அலைகின்ற அடியேனுக்கு அக்கடலை நீந்திக் கரையேறுதல் உண்டாமோ? மிகுந்த தபோதனர்களால் துதிக்கும் அருணசலக்கடவுளே! உமது பாதாரவிந்தங்களை அடையும் நெறியை ஒருதரஞ் சொல்லும் எ-று. 37

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
அப்பரிய சோணகிரி யப்பனே—எப்பொழுதும்
பெண்ணைவிட்டு நீங்கா நின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண்.

இ-ள். சொல்லுதற்கரிய மகாவிஷ்ணுவாலும், பிரமதேவனாலும் நினைத்தற்கரிய பெரிய அருணாசலக்கடவுளே! எப்போதும் மலைமகளைவிட்டு நீங்காத தேவரீரது பேரழகு எக்காலமும் அடியேனது இரண்டு கண்களையும் விட்டு நீங்காது எ-று. 38

காணா ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணமற் றுன்காண நாடியே—சேணுடர்
ஆயும் புகழருணை யண்ணா மலையானே
மாயுந் தமியேன் மனம்.

இ-ள். தேவலோகத்தாரால் தோத்திரஞ்செய்யும் அருணாசலக்கடவுளே! மகாவிஷ்ணு பிரமதேவன் இவர்கள் தேவரீரது பாதாரவிந்தத்தைக்காணார். அதைச் சாஸ்திரங்களா லறிந்தும் புல்லறிவனாகிய யான் காண நாடியதால் எளியேன் மனம் விசாரப்படுத்தும் எ-று. 39

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமான்—அனத்தனருள்
தக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றுணைமனமே நம்பு.

இ-ள். முனீஸ்வரர்களும் தேவர்களும் முப்புராதியர்களால் துன்பப்படும் வகையறிந்து கோபமுற்று முப்புரத்தையெரித்த தயாபரன், பிரமன்பெற்ற தக்கன் தலையை யறுத்த அருணகிரிநாதன் மனமே நமக்குத் துணையென்று நம்புவாய் எ-று. 40

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
உம்பர்கோ னன்றுரைத்த வுண்மையை—நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
எடுத்தாலுஞ் சோணேச னென்று.

இ-ள். (அஞ்ஞானம் பொருந்திய) என் மனமே! நீ எப்போதும் நம்பியிரு. நான்குவேதங்களும் அருணசலக்கடவுளே தேவரென்று சொல்லும் உண்மையை நீ நம்பியிருந்து நம்மைக் கெடுத்தாலும் அல்லது கேடுருமல் இரட்சித்தாலும் சோணேச னென்று சொல்வாய் எ-று. 41

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தநாள்
இன்று தமியேற் கியம்பிடாய்—நன்றிதரும்
ஏகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம்.

இ-ள். நன்மையைத்தரும் ஏகவஸ்துவான அருணசலக்கடவுளே! ரிஷபவாகனமேறுங் கர்த்தனே! நீர் எனக்கு அழியாதவரம் என்றைக்குக் கொடுப்பீர்? மூடனுகிய யான் என்றைக்குப் பெறுவேன்? இப்போது அடியேனுக்குச் சொல்வீர் எ-று. 42

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்ரு ணடியே—ஏகாந்த
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
எண்ணு மறவா தெடுத்து.

இ-ள். என்றைக்குஞ் சாகாவரம் பெறலாம். அதெப்படியெனில், நாகங்களை ஆபரணமாகப் பூண்ட அருணசலக்கடவுளது பாதாரவிந்தத்தை இப்போது நம்பி ஏகாந்தமாக உருத்திராட்ச மாலையைக்கொண்டு நாவினல் பஞ்சாட்சரத்தை மறவாமல் ஜபம் செய் எ-று. 43

எடுத்த பயனை யிருவினையை யெண்ணார்
அடுத்தசிவ பூசை யறியார்—தொடுத்த
நெறியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
அறியாத மானுடவ ரச்சு.

இ-ள். இந்த ஜெனனம் எடுத்த பயனையும், நல்வினை தீவினையென்னும் இருவினையையும் நினையார். நெருங்கிச் சிவபூஜையும் செய்யார்; நல்ல நெறிமிகுந்த அருணசலக்கடவுளது மெய்படியாரையும் அறியார்; மானிடரென்று சொல்லும் மௌடீகர் எ-று. 44

அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—இச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான்.

இ-ள். அக்கினிஸ்வரூபம் பொருந்திய அருணை சலக்கடவுளே! சகலமானிடரையும் ஒரு அச்சினுல் சிருஷ்டித்து அதில் இரண்டுபிரிவாகப் பிரித்து சிலர் தங்களிஷ்ட பாக்கியங்களை யனுபவித்து வாழ்ந்துக் கொண்டிருக்கவும், சிலர் தரித்திரராய் மெலிந்து வாய் மூடி கைகட்டிக்கொண்டு வாழ்வை யுடையவர்களுக் குத் தாழ்ந்து பணிவிடை செய்யவும் வைத்ததென்ன? எ-று. 45

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதைதாய்—தானே
அனைத்துயிருங் காக்கு மருணேச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு.

இ-ள். நானே உலகங்களிளெல்லாம் நிறைந்த வன். என்னசைவே சராசரமுதலிய சகல ஜீவராசி களுக்கும் நானே. எல்லார்க்குந் தந்தைததாய் நானே. சகல ஜீவஜெந்துக்களைக் காக்கும் அருணசலக் கடவு ளென்று சொல்லிய கர்த்தனைத் தியானித்தால் மனத் தின்கண் உண்டாகிய துக்கமானது நாசமாய்ப்போம் எ-று. 46

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டினுல்—ஈண்டுலகில்
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச ரென்றுரைக்காற் சொல்.

இ-ள். (மூடத்துவம் பொருந்திய என்) மனமே! இறந்தும் பிறந்தும் உழலப்பட்ட கொடிய வியாதியை நீக்குதற்கு தகுந்த மருந்து உனக்கு வேண்டியிருந் தால் இவ்வுலகத்திலிருக்கும் வீணான தெய்வங்களைக் கருதாமல் அருணசலக்கடவுளே யென்று ஒருதரஞ் சொன்னுல் அதுவே நல்ல மருந்தாம் எ-று. 47

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா—வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ.

இ-ள். துன்பத்துக்கிருப்பிடமாகிய எனது நெஞ்சமே! சொல்லுதற்கரிய நான்கு வேதங்களும் முறையிட்டதுபோலவே நினைத்து அரிதாகிய சிவபூசையிலே பக்தியோடிருந்து வெல்லுதற்கரிய விஷத்தைக் கண்டத்திற் றரித்த அருணசைலக்கடவுளது பாதாரவிந்தத்தை மறவாமல் நினைத்துக்கொண்டிருப்பாய் எ-று. 48

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்—றூயகமாம்
அண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது.

இ-ள். அருணசைலத்தில் வசிக்கும் அப்பனே! என் பிறவிநோயாகிய மலையை நீக்கும்போது நீயே வந்து இரட்சிக்கவேண்டும், நினைக்குமிடத்தில் உம்மைப்போல் ஆதரவாகிய துணை அடியேனுக்கு யார் உண்டு? இல்லை எ-று. 49

போதுமதி சூடும் புனிதர் புவியீன்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்—பாதம்
இறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று.

இ-ள். இளஞ்சந்திரனைச் சடாமகுடத்திற் றரித்தவரும், பூலோகத்தைப் பெற்ற மாதாவாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்தவருமாகிய அருணசலக்கடவுளது பாதாரவிந்தங்களை, மனமே! நீ கெட்டியாகப்பிடி; கூற்றுவனென்னும் எமன் எப்போதும் உன்னிடத்தில் நெருங்கப் பயப்படுவான் எ-று. 50

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலில் [ல்
ஏற்றிருக்குமாயவன்கணெப்பொழுதுஞ்—சாற்றுகையி

அம்புயத்தோன் கம்மிருக்கு மண்ணு மலேநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு.

இ-ள். எமதர்மராஜனே மார்க்கண்ட னிமித்தம் உதைத்ததால் அவன் முன்காலில் விழுந்துகிடப்பன்; புறங்காலில் மகாவிஷ்ணுவானவர் சக்கராயுதம் பொருட்டுத் தினம்தினம் நூறு தாமரைபுட்பங்கொண்டு அர்ச்சிக்குநாளில் ஓர்நாள் அவர் பக்தியைச் சோதிக்கும் பொருட்டு ஓர் புட்பத்தை மறைத்ததால் அந்தப் புட்பத்திற்குப் பதிலாகச் சாற்றிய மகாவிஷ்ணுவினது கண்ணிருக்கும்; சொல்லுதற்கரிய கரத்தினிடத்தில் தாமரை மலரிலுதித்த பிரமன் தனக்கு ஐந்து சிரசென்று கர்வங்கொண்டதை யறிந்து கிள்ளிய சிரமிருக்கும், இவ்வித பெருமையையுடைய அருணசலக்கடவுளுக்குச் சமானமானவர் யார்? மனமே நீ சொல்லுவாய் எ-று. 51

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
அப்பனே நன்னு லறிந்தாலும்—இப்புவியிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார் பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று.

இ-ள். சொல்லுதற்குரிய ஞானத்தின் பொருளாகிய அருணசலக்கடவுளே! உமது ஆகமசாஸ்திரங்களைப் பழுதறக்கற்றாலும் இப்பூவுலகின்கண் தங்களை அடிமை யாகக்கொண்ட ஞானசிரியரைப் பொருளாகக்கொண்டு கரையேருதவர்கள் பல சாஸ்திரங்களைக் கற்றும் வீணவதன்றிப் பயன்பெருர் எ-று. 52

கற்றதனுற் ரெல்லேவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனுற் போமோ பிறவிநோய்—உற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணே நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

இ-ள். திருப்பாற்கடலிலுதித்த விஷத்தை விருப்பத்தோடு உண்ட அருணசலக்கடவுளது பாதாரவிந்

த்தை மெய்யன்போடு துதித்து வணங்காமல் பல சாஸ்திரங்களைக் கற்றதனுல் முன்ஜனனத்திற் செய்த கொடியவினை நம்மைவிட்டு நீங்குமோ? நல்ல உயர்ந்த குலத்தில் பிறந்ததால் பிறவியென்னும் அவ்வியாதி நெருங்காமற்போமோ? எ-று. 53

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்—செறிவுண்
ஆதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை [டாம்
ஓதிமட நெஞ்சமே யுன்.

இ-ள். அஞ்ஞானம் பொருந்திய என் மனமே! ஆதியாகிய அருணசலக்கடவுளது பஞ்சாட்சரத்தைப் பக்தியுடனே ஜெபித்தால் நல்லநெறியும் அழியாத பதவியும் ஞானப்பிரகாசமும் உண்டாம்; நினைத்த கருமங்களெல்லாம் விக்கினமின்றி முடியும் எ-று. 54

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு—முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து.

இ-ள். நினைப்பதற்குக் கருத்தும், துதிசெய்ய நாவும், வாசிக்கச் சிவபுராணங்கள் பலவும் தடையில்லா திருந்தும் நான்கு வேதங்களுக்கு மெட்டாத அருணசலக்கடவுளது இரண்டு பாதங்களையும் வணங்கித் துதித்து நற்கதியை யடையவொட்டாமல் முன்செய்த கொடியவினை எதிரில் நின்று தடுக்கும் எ-று.

உயர்ந்தவர்க்கு ளெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா—பயந்தமரர்
உண்ணப்ப டாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென்.

இ-ள். உயர்ந்த பொன்னுலகத்தின்கண் வசிக்கும் தேவர்களுக்கு அரிய தெய்வமாகிய தேவாதிதேவனே! சகல ஜீவஜெந்துக்களையும் இரட்சித்துப் புகழ்பெற்ற அருணசலக்கடவுளே! தேவர்களெல்லாம் பயந்து

முறையிட்டகாலத்தில் உண்ணுதற்கரிய விஷத்தை விருப்புடனேயுண்ட தேவரீரை இறந்துபோகும் தேவர்களுக்குச் சமமாய் நினைப்பார் இது என்ன அதிசயம் எ-று. 56

என்ன சனன மெடுத்தார் புவிமீதில்
அன்னமிடா ரின்சொல் லறிகிலார்—முன்னமே
ஒன்னார் புரமெரித்த வுண்ணா முலைபாக
என்னார் திருநீ றிடார்.

இ-ள். இவ்வுலகத்தின்கண் ணுள்ளமனிதர் என்ன சனனமெடுத்தார்? அன்னதானஞ் செய்யார்; பிறருக்கு விருப்பத்தைக் கொடுக்கும் நல்ல சொற்களையுஞ் சொல்லார், முன்னே தேவர்களுக்குப் பகைவராகிய திரிபுரத்தாரை எரித்த உண்ணாமுலையம்மையினது இடப்பாகத்திலுடையவனே யென்றுஞ் சொல்லார்; வெண்மை பொருந்திய திருநீறு மணியார் எ-று. 57

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக்—காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம்.

இ-ள். திருநீறுந் தரியேன்; பஞ்சாட்சரத்தையும் பக்தியுடனே நினைந்து செபியேன்; அப்படிப்பட்ட அறிவீனனாகிய என்னையும் அடிமைகொண்டு இரட்சித்தருளுதற்கு கங்கையைத்தரித்த சடாமகுடத்தையுடையவரும் மான் மழு தரித்தவருமாகிய அருணாசலக்கடவுளுக்கல்லவோ பரம் எ-று. 58

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வெண்ணாத பாவ—நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
இறப்பிற்கு மீடாயி னேன்.

இ-ள். மெய்யறிவையுடையார்கள் துதிக்கப்பட்ட அருணாசலக்கடவுளே! பரகதியென்னும் மோட்சத்திற்கு வித்தாகிய உமது பஞ்சாட்சரத்தைப் பக்தியுடனே ஜெபியாத பாவத்தினால் நரகமென்னும் பிறப்பிற்கு ஈடாகப் பிறந்து இறப்பிற்குஞ் சமமானேன்.

எனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானெறுப்பாய் சோணகிரித் தா ணுவா—மா னுகந்த
எந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல்.

இ-ள். மூடத்துவம்பொருந்திய எனது நெஞ்சமே! நீ ஏன் இரவும்பகலுமாக ஒழியாமல் சரீரத்தை நிந்திக்கிறாய்; மான் மழு தரித்த அருணாசலக்கடவுளாகிய என்னப்பனால் நல்வினை தீவினையென்னும் இருவினையாகிய நோய் நம்மைவிட்டகலும்; அந்த ஈசனைத் துதியாமல் சரீரத்தை நிந்தித்தால் பிரயோசனமென்ன? எ-று. 60

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும்—விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான்.

இ-ள். நம்மாலே என்ன செய்யலாம்; அருணாசலக் கடவுளமைத்த கட்டளையின்படி யல்லாமல் மனது புண்ணாகக் கவலைகொண்டாலும், நமது வல்லமையினால் மிகுந்த வாழ்வு வருமோ? மனமானது பேராசையின்படியே கொடுக்குமோ? எ-று. 61

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்—தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
அப்பனே நீயேறு மான்.

இ-ள். அந்தரவாசிகள் துதிக்கும் அருணாசலக் கடவுளே! தேவரீர் இடப்பாகத்திற்றரித்த பார்வதி யென்னுமானே! எனக்குத் தவமும் தவத்திற் பெறப்பட்ட பேரும், தாய் தந்தையுமாகச் சொல்லுதற்கரிய உன்பாதத்திற் சேர்க்கும் எ-று. 62

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றாடுகிலென்
தானம் பதினாறுந் தான்செயினென்—ஆனனங்கள்
அஞ்சுடையான் சோணகிரி யண்ணலைனை யெண்ணாதை
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று.

இ-ள். சத்தியோசாதனம், வாமனம், அகோரம், தத்புருஷம், ஈசானியம், என்னும் ஐந்து முகத்தை யுடைய அருணாசலக்கடவுளை பக்தியோடு துதியா நெஞ்சை யுடையவர்கள் இப்பூவுலகின்கண் வேண்டிய வரங்களைக் கொடுக்குங் கங்கையொத்த ஆயிர நதிகளிற் சென்று ஸ்நானஞ்செய்தாலும், முப்பத்திரண்டு தரு மங்களையும் வழுவாமல் நடத்தினாலும் பிரயோசன மென்ன? ஒன்றுமில்லை எ-று. 63

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்—வென்றிதரும்
அம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல்.

இ-ள். அஞ்ஞானம்பொருந்திய என் மனமே! நீ யோரிடத்தில் நின்று தவஞ்செய்யாய்; சிறப்புப் பொருந்திய ஆலயத்திற்சென்று பூசைசெய்து சிவதரு மத்தையும் நடத்தாய்; அப்படியிருக்க வெற்றியைக் கொடுக்கும் அழகிய மானைக் கரத்திலேந்திய அருணா சலக்கடவுளது தாமரைமலரை யொத்த பாதம் சும்மா கிடைக்குமோ? சொல்வாய் எ-று. 64

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாதம்
அம்மால் விரிஞ்ச னறிகிலார்—நம்மால்
இருந்துகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே
பொருந்த நினையாத போது.

இ-ள். மனமே! பல ஆசையை நீக்கி, ஒரு நிலை யில் நின்று துதிக்காமல் அருணாசலக்கடவுளது திருப்பாதம் சும்மா கிடைக்குமோ? அந்தப் பிர்மாவும் விஷ்ணுவும் அநேககாலந் தேடியும் அறியார். நாம் கிடைக்குமென்று செருக்கினால் கதைசொல்லுதலால் என்ன பிரயோசனம்? எ-று. 65

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்—ஞாதை
விருப்பமா மதிசூடி வெண்டலையோ டேந்தி
இருப்பா னருணேச னின்று.

இ-ள். தக்கனுடைய யாகத்தில் சூரியனுக்கு இரண்டுபல்லுதிர்ந்தும், புண்டரீகமென்னுந் தாமரை மலரிலுதித்த பிர்மாவின் தேவியாகிய சாஸ்வதியை மூக்கரிந்தும், பேர்பெற்ற வீரபத்திராது தந்தையாகிய அருணாசலக்கடவுள் விருப்பத்துடன் இளஞ்சந்திரனை சடையிற்றரித்தும், பிர்மகபாலத்தைக் கையிலேந்தியு மிருப்பார் எ-று. 66

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயரம்
என்றைக்குப் போமருணை யீசனே—கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியாய்
என்னை நெருக்கு மிவை.

இ-ள். அருணாசலக்கடவுளே! கொன்றைமாலையையும், புன்னைமாலையையும், எருக்கமாலையையும், சந்திரனையும், சடாமகுடத்திற் றரித்தவரே! இன்றைக்கும் இராத்திரிக்கும் வேண்டும் நாளைக்கு வேண்டுமென்னும் சமுசாரதுக்கம் நெருங்காமலென்னைவிட்டு என்றைக்கு நீங்கும்? எ-று. 67

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
இருக்கும் பலபிணிநோ யெல்லா—முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை.

இ-ள். என்னை வருத்து மனைவியையும், என்னுயிரைவிட்டு நீங்காமல் சூழ்ந்திருக்கும் கொடிய வியாதிகளையும், அகற்றும் வகையறிந்தேன்; அருணாசலக் கடவுளது பாதாரவிந்தத்தைக் கருத்திற்கொண்டேன்; இனி எனக்கென்ன குறை? எ-று. 68

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று—மறைபுகுந்தேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல்.

இ-ள். மூடத்துவம் பொருந்திய மனமே! சொலலுமிடத்தில் நமக்கு யாதொரு குறைவுமில்லை,

தேவர்களுக்குத் தேவனாகிய அருணாசலக் கடவுளுக்
கென்று சரீரத்தை நியமித்துச் சரணமடைந்தோம்;
எமதருமன் நம்மைப்பற்றி நெருங்காமல் அவன் கர
த்திலிருக்கும் சூலாயுதத்தையுஞ் ஜெயித்தோம் எ-று.

வேலைவிட முண்ட விமலாருணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை—மேலமரர்
பண்ணினார் பூசையறம் பண்ணிப் பரகதியில்
நண்ணினா ரெல்லா நலம்.

இ-ள். திருப்பாற்கடலி லுதித்த விஷத்தை யுண்ட
வரும் கொன்றைமாலையைத்தரித்த மார்பையுடைய
வருமாகிய அருணாசலக்கடவுளது பாதாரவிந்தங்க
ளைப் பூசைசெய்து தேவர்கள் முதலிய சகலரும் நற்கதி 70
யடைந்தார்கள் எ-று.

எல்லார் பிறப்பு மிறப்புமியற்பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

இ-ள். உலகத்தின்கண் ணுள்ளவருடைய பிறப்பு
மிறப்பும் இயலிசை யென்னும் இலக்கணங்களையறிந்த
வித்வான்கள் சொல்லிய ஆகமசாஸ்திரங்களினா லறிந்
தோம்; நமது அருணாசலக்கடவுள் ஒருவர் வீட்டிலே
பிறந்தாரென்கிறதையும் இறந்தாரென்கிறதையும்கேட் 71
டிலேம் எ-று.

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்றாதார்—தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார்.

இ-ள். பொன்னினழகை வாய்ந்த திருவண்ணா
மலையிலமர்ந்த ஈஸ்வரரது அடியார்களுடைய பாத
தாமரைகளில் நல்ல புட்பங்களைச் சாற்றித் துதித்து
நற்கதியடையாதவர் எப்போதுங் கொடிய மனத்
துடன் உனைவெறுத்திடு வேடராய் வஞ்சனையுடைய
இயமனுக்குத் தினம் பயப்படுவார் எ-று. 72

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
அஞ்சலென்ற சோணகிரி யண்ணலே—நெஞ்சறிய
ஆண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண்.

இ-ள். வஞ்சகனுகிய இயமனுக்குப் பயந்து சோர்வடையும் எளியேனைப் பயப்படாதே யென்று அபயஸ்தங்கொடுத்த அருணசலக்கடவுளே! மனமறிய இரட்சிக்குங்குரு தேவரீரென அறியாதவர் செய்த தவமானது பட்டுப்போன மரத்திற்கு அணைத்த மண்போல் வியர்த்தமாம் எ-று. 73

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே—விண்ணப்பம்
ஒன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
என்று தருவா யெனக்கு.

இ-ள். இப்பூவுலகின்கண் பிறந்து இறந்துபோகும் தெய்வங்களுக்குச் சமமாக எண்ணப்படாத அருணசலக்கடவுளே! ஒரு விண்ணப்பமுண்டு; அதென்னவெனில், அடியேன் தேவரீரது பாதாரவிந்தங்களை விட்டு நீங்காமலிருக்க வரந்தருவீர் எ-று. 74

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்ன—குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
என்னைப் பொருளா வெடுத்து.

இ-ள். அருணசலத்தில் வசிக்குங் கர்த்தனே! என்பேரில் ஆசைவைத்து வரந்தருவீர். உமது இரண்டு பாதங்களையும் வணங்கித் துதியாத திரிபுரத்தாரை எரித்த தேவதேவனே! தேவரீர் குருவாகவந்து யான் பூர்வத்திற் செய்த கொடிய வினையையகற்றி என்னை ஒருபொருளாக மதித்து ரட்சியும் எ-று, 75

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்—விடப்பானம்
பண்ணி யநேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது.

இ-ள். அடியார்களை ஒருபொருளாக மதித்து சிருஷ்டிக்கிறவனும் நீயே; சிருஷ்டித்து இரட்சிக்கிற வனும் நீயே; ஒருவரிடத்திற் போய் யாசிக்கச் செய் கிறவனும் நீயே; யாசிக்கிறவனுக்குக் கொடுப்பவனும் நீயே; லோபத்தனமாய் ஒன்றுங்கொடாதவனும் நீயே; விஷத்தைப்புசித்து அனேகம்பேருடைய பயத் தைக் கெடுத்து இரட்சித்த அருணசலக் கடவுளே! புண்யஸ்வரூபனே! எல்லா விஷயங்களுக்குக் கார ணம் இப்போது தேவரீர்தான் எ-று. 76

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
எப்போதுந் தள்ளா திரங்கியே—முப்போதும்
பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து.

இ-ள். இப்போதைக்கில்லை பின்னைக்கில்லை யென்று யாசிப்பவர்களை எப்போதும் நீங்காமல் மன திரங்கி இரட்சிக்கும் அருணசலக்கடவுளே! தேவ ரீரை யடியேன் மூன்றுகாலங்களுமு விடாமல் பூசை செய்வதெந்தநாள்? புனிதமானவனே! யான் சோண சலத்தை நினைந்து நேசிப்பது எந்தநாள்? எ-று. 77

நினையேன் றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்—புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர்.

இ-ள். தபோதனர்கள் துதிக்கும் அருணசலக்கட வுளே! புல்லறிவனுகிய யான் உம்மை நினையேன்; தேவரீரது ஆலயத்திற்கு வந்து நின்று இரண்டு கண் களிலும் சலம்பெருக அதனுல் நனையேன்; பிறப்பென் னும் வலையை அறுக்கவும் நாடேன்; உமது பொன் போன்ற பாதங்களுக்குப் புட்பமாலைசாற்றித் தோத் திரஞ் செய்யேன்; இவ்வித மௌடீக புத்தியையுடைய எனக்கு இறக்குங்காலததில் உதவிசெய்கிறவர்கள்யார்?

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
ஆரா வமுதை யறியாமல்—வாராது
தீது நலமுந் தெரியுங்கா னெஞ்சமே
ஏதுமவ னென்றே யிரு.

இ-ள். ஆயிரநாமத்தையுடைய அருணசலக்கடவுளைத் தெவிட்டாத அமிர்தத்துக் கொப்பானவரை யறியாமல் நன்மையும் துன்மையும் உண்டாகாது. நெஞ்சே! சகலமும் அவனென்றே யெண்ணியிருப்பாயாக எ-று. 79

இருந்து நினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தா ணு வருணகிரி
எம்பிரா னோரஞ் செழுத்து.

இ-ள். சகல சீவசெந்துக்களுக்கும் கர்த்தனுகிய அருணசலக் கடவுளது பஞ்சாட்சரமென்னும் ஐந்தெழுத்தை மௌனமாக நின்று சேவிப்பவர்களுடைய நல்வினை தீவினையென்னும் இரண்டையும் நீக்கும். இப்பிறப்பிற்பொருந்திய தரித்திரத்தையும் போக்கும் மருந்தல்லவோ எ-று. 80

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே—அஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
இன்றறுப்பான் சோணேச னென்று.

இ-ள். தாமரைமலரிலுதித்த பிரமதேவன் ஐந்தெழுத்தென்னும் பஞ்சாட்சரத்தை ஜெபிப்பவர்களுக்குப் பயந்து அவர் தலையிலெழுதிய இறப்பெழுத்தைக் கலைத்துவிடுவன். அதேனெனில், நமக்கும் ஐந்துதலை ஈஸ்வரருக்கும் ஐந்துதலையென்று கெர்வங்கொண்டதால் கோபித்து முன்னிருந்த ஐந்து சிரசில் ஒரு சிரசை யறுத்த அருணசலக்கடவுள் இப்போதிருக்கும் நான்கு சிரசையும் இன்றைக்கு அறுத்தெறிவாரென்று நினைத்து எ-று. 81

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனர்க்—கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான்.

இ-ள். எப்போதும் யமதருமராஜன் தனது தூதர்களை யழைத்து எதிர்நின்று அருணசலக்கடவுளுக்கு

அடிமையானவர்களைக் கண்டால் நீங்கள் அவர்களை வணங்கித் துதித்து அப்பாற் போங்களென்று புத்தி வரும்படி சொல்வான் எ-று. 82

புத்திதருஞ் சோணேசன் பொன்னடியை வாழ்த்துநர்க்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கு—முத்திதரு [குப்
மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு.

இ-ள். அருணசலக்கடவுளது பொன்போன்ற பாதங்களைத் துதிப்பவர்களுக்கு நல்லபுத்தியும், தெய்வ பக்தியும், மெய்ஞ்ஞானமும், மோட்சமுங் கொடுக்கும். வெல்லுதற்கரிய தீவினையை நீக்கும். ஆகையால் துதித்து நற்கதி யடைவதற்கரிதாகிய எனது நெஞ்சமே! பஞ்சாட்சரத்தை மறவாமற் செபித்துத் தோத்திரஞ் செய்வாய் எ-று. 83

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்—தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னரு
சங்கரா கங்கா தரா. [ணேச்

இ-ள். ஆபரணமாக அணிவதற்கிசைந்த ரத்தினங்களும் முத்துகளும் அதற்கு வேண்டிய பசுமை பொருந்திய பொன்விளைவுமிருக்க, அவைகளையணியாமல் விஷத்தையுண்டு பாம்பும் புலித்தோலும் எலும்பும் ஆபரணமாகத்தரித்தாய்; இதுவென்ன திருவண்ணுமலையில் வசிக்குங் கர்த்தனே! கங்கையைச் சடாமகுடத்திற் றரித்தவனே! சொல்வீர் எ-று. 84

கங்கா தரனே கடையேனை யெந்தநாள்
அங்கா தரவா வழைக்குநாள்—நங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு.

இ-ள். அருணசலக்கடவுளே! கங்காதரனே! கடையேனுகிய என்னை ஆதரவோடு அழைத்து உமது பாதத்திற் சேர்க்குநாள் எந்தநாள்? என்னுடைய

விருப்பத்தை யறிந்து பரகதியென்னும் மோட்சத்தை
அடையும் நாளெந்தநாள் சொல்வீர்? எ-று. 85

செப்பரிய வாணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
ஒப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினேன்—இப்போ
தருவாகி நின்ற வருணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு.

இ-ள். சொல்லுதற்கரிய ஆணவம் மாயை காமிய மென்னு மும்மலத்தையும், இணையில்லாத சஞ்சல த்தையும் இப்போது என்னைவிட்டு நீக்கினேன். எப் படியெனில் அருவுருவாக யிருக்கும் அருணாசலக்கட வுளைக் குருவாக எனது நெஞ்சத்திற் கொண்டு எ-று.

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கும்
அண்டர்கோ வேயருணை யண்ணலே—தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்றும்
அடையா தெழுபிறப்பா மல்.

இ-ள். தாங்கள்கொண்ட நெறிமுறை கிஞ்சித்துங் கெடாத அடியார்களது மனதில் நிலைத்திருக்கும் தேவனே! அண்ணாமலைக்கிறைவனே! உமது அடியார் களுக்கும் புத்திகெடாது நல்வினை தீவினையென்னும் இருவினையால் எழுவகைத் தோற்றமென்னும் துன்பத் திற் கிடமாகிய பிறப்பு எப்போதும் அணுகாது எ-று.

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலும் [ய
நல்லதென்று நெஞ்சகத்தி னாடேன்யான்—சொல்லரி
அண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணலிடத்
துண்ணா முலையாளை யும்.

இ-ள். சொல்லுதற்கரிய அண்ணாமலையில் வசிக் கும் கர்த்தனையும், அவரது இடப்பாகத்திலமர்ந்த உண்ணாமுலையம்மையையும் அல்லாமல் வேறுதெய் வத்தை யறியேன்; அப்படியறிந்தாலும் இது மோட் சத்தைக் கொடுக்கும் நல்லதெய்வமென்று இருதயத் தில் நினையேன் எ-று. 88

உம்மை நினைந்தேயுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லால்—இம்மையிலே
எல்லாருங் காண வெளிதோ புவிமீதில்
நல்லார் துதிக்கு நடம்.

இ-ள். மூவாசையை யொழித்த ஞானவான்கள் துதிக்கும் அருணாசலக்கடவுளே! உம்மை உண்மையாக நினைத்து மனமுருகித் தோத்திரஞ் செய்பவர்களுக்கல்லால் இப்பிறப்பில் மற்ற யாவருங்கண்டு தரிசிக்க அரிதோ! இப்பூவுலகத்தின்கண் நல்ல பெரியோர்கள் கண்டு தோத்திரஞ் செய்யும் நடனம் எ-று.

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லார்
உடலையொறுத் தாலாவ துண்டோ—அடலைநூல்
ஓதினுற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினுற் பாம்புசா மோ.

இ-ள். நடலையென்னும் பிறப்பையறுத்து ரட்சிக்கும் அருணாசலக்கடவுளிடத்தில அன்பில்லாதவர்கள் ஜெபதபங்களில் உடலை வருத்தியதா லாவதொன்றுண்டோ? வேதசாஸ்திரங்களை வாசித்ததினுல் ஆசாபாசமென்னும் கர்மங்கள் அவர்களைவிட்டு நீங்குமோ? நீங்காது. அப்படிப்போல புற்றைத் தடிகொண்டடித்தால் அதனுள்ளிருக்கும் பாம்பு இறந்துபோமோ? இறவாம லுள்ளிருத்தல்போல அவர்கள் பாபகர்மங்களும் நீங்காது எ-று.

ஈஸ்வரபக்தி யில்லாதவர்கள் செய்யும் விரதம் விருதாவாம் என்பதாம். 90

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
ரூகமறே னின்பெருமை தானறியேன்—காகநாய்
தம்மதென் னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியில்
நம்மதென் னுங் கண்டாய் நரி.

இ-ள். அருணாசலக்கடவுளே! புல்லனுகிய யான் மோகமென்னும் ஆண்மையை நீக்கேன், ஆணவம் மாயை காமியமென்னும் மும்மலத்தினு லுண்டாகிய

விருப்பத்தையும் அகற்றேன், உமது பெருமை யிப் படிப் பட்டது என்றுமறியேன், மானிட சரீரத்தைப் பெற்று காக்கை நரி நாய் முதலியவைகள் தங்களுக் கிரையென்று நினைத்துக் கொள்வதல்லாமல் அச்சரீ ரத்தால் வேறு பிரயோசனங் காணேன் எ-று. 91

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தேன்
அரிக்கு மரிதா மரனே—தெரிக்குமறை
காணுத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணுத நாயேன் பிறந்து.

இ-ள். மகாவிஷ்ணுவுக்கும் காணுதற்கரிய ஈசனே! நான்கு வேதங்களாலும் அறியப்படாத அருணுசலக்கடவுளே! நெற்றிக்கண்ணை யுடைய வனே! உமது பாதாரவிந்தத்தை நினைத்துத் தோத் திரஞ்செய்யாத அடியேன் இச்சரீரமெடுத்தும் நரி புசிப்பதற்குக் கட்டுச் சோறெனச் சுமந்து துன்பப் பட்டேன் எ-று. 92

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடேன்
அறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திறவா
உம்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றன்.

இ-ள். தருமமே மிகுதியாய்த் தழைக்கும் திருவண் ணுமலையில் வசிக்குங் கர்த்தனே! பிறப்பிறப்பில்லாத தேவரீரைத் தோத்திரஞ்செய்து உமக்கடிமையான பக்தர்களைத் துதிப்பதெல்லாம் பிறந்து பிறந்திறக்குந் தெய்வமென்னும் பிணங்களைக்கொண்டாடித் தோத்தி ரஞ் செய்யேன் எ-று. 93

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே—ஏனம்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்ததென்ன நீர்.

இ-ள். சதுர்யுகத்திலுமறியாத அருணுசலக்கட வுளே! முப்புராதிகளான ராக்ஷதாது உபத்திரவத்தினு லும், சமுத்திரத்திலுதித்த விஷத்தினது கொடூரத்தி

ஞலும், பயந்து துக்கித்த தேவர்களுக்காக அந்த ராக்ஷதர்களுடனே முப்புரத்தை யெரித்தும், கடலி லெழுந்த விஷத்தைப் புசித்தும், அவர்களை யிரட்சித் தீர். மகாவிஷ்ணுவானவர் பன்றியாகித் தேவரீரது பாதாரவிந்தங்களைக்காண ஆசையோடு பூமியைத் துளைத்துக்கொண்டு சென்றும் அவருக்கும் புலப்படா மல் நெருங்குதற்கரிய அக்கினிமலையி லிருந்ததென்ன சொல்வீர்? எ-று. 94

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
ஆரா வமுதேயென் னையனே—பாராளுந்
தாதையே பூசைபறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின்.

இ-ள். சமுத்திரத்தில் பிறந்த விஷத்தையுண்ட பிறப்பில்லாதவனே! திருவண்ணாமலையில் வசிக்குந் தெவிட்டாத அமுர்தமே! என்னையனே! சகல புவனங் களிலுள்ள சராசரங்களை இரட்சிக்குந் தந்தையே! உம்மைப் பூசிக்கும் நெறியும் தருமமுமறியாமல் திரியும் அறிவில்லாதவனாகிய அடியேனுக்கு உம்மை யல்லாமல் ஆதரவு யார்? எ-று. 95

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
அன்னந் தருமருணை யையரே—என்னை
எடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர்.

இ-ள். சகல சீவஜெந்துக்களுக்கும் அன்னங் கொடுத்திரட்சிக்கும் அருணசலக்கடவுளே! என்னை ஒரு பொருளாக நினைத்து சிருஷ்டிப்பதற்குஞ் சிருஷ் டித்து இரட்சிப்பதற்கு மெனது பிறப்பென்னும் நோயை நீக்கவும் இவ்வுலகில் தஞ்சமென்றடைந்த என்னை யிரட்சிப்பதற்கும் உம்மையன்றி வேறொரு தெய்வமில்லை எ-று. 96

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறப்பை
ஆர்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற்—பார்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
ஐயா கருணைல யா.

இ-ள். கங்காதேவியைச் சடாமகுடத்திற் றரித்த சோதிஸ்வரூபனே! அழியாத வரத்தைக்கொடுக்கும் புண்ணியனே! அருணாசலக்கடவுளே! அன்பரது மனதை ஆலயமாகக்கொண்டவனே! பார்க்குமிடத்தில் எனது அளவில்லாத பிறப்பிறப்பை அழிக்கவல்லவர் நீரே யல்லாமல் இப்பூவுலகில் யார்? எ-று. 97

கருணால யா நின் கழல்பணிய மாட்டேன்
அருணா சலாவென் றழையேன்—மரணாந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து.

இ-ள். கிருபைக்கடலான ஐயனே! உமது பாதாரவிந்தங்களை வணங்கித் தோத்திரஞ்செய்யேன்; அருணாசலக்கடவுளே யென்றும் அழையேன்; மரணகாலத்திலும் உம்மை நினைத்து நற்கதியடையும் வழியும் அறியேன்; எனது கண்களைக்கொண்டு தேவரீரது ஸ்வரூபத்தைப்பாரேன் எ-று. 98

குறியே நிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க்கொன் றாற்றேன்—சிறியேன்
னாயுமறை தேடரிய வண்ணா மலையானே
மாயுமிருந் தையா மனம்.

இ-ள். நான்குவேதங்களுந் தேடுதற்கரிய அருணாசலக்கடவுளே! சிறியனாகிய யான்தேவரீரைத் துதித்து உமது பாதாரவிந்தங்களை அடையும் வகையுஞ் சற்றுமறியேன், அறிந்த புண்ணியவான்களுக்கும் ஒருவுபகாரஞ் செய்யேன். என்மனமானது சுகமாயிருந்து அலைச்சல்பட்டு இறந்துபோம் எ-று. 99

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதோ—வெய்யவினை
என்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கும்
உன்னிச்சை யன்றோ வுரை.

இ-ள். என்னையனே! மாத்திரைற்செய்தபதுமை நடிப்பது ஆட்டிவைக்கும் சூஸ்திரி சூஸ்திரக்கயிற்றின் கைப்பழக்கத்தினாலே அந்தப்பதுமை நடிப்பதுபோற் கொடியவினைகள் என்னிச்சையாற்செய்ததோ? அருணாசலக்கடவுளே! ஜீவஜெந்துக்களைச் சிருஷ்டித்து யிரட்சிக்குந் தேவரீர் இசையாற் செய்வதல்லவோ சொல்லும் எ-று. 100

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை—நிரைக்குமே
எண்ணார் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணா ரமுதமெனுங் கார்.

இ-ள். மதியாதவர்களது முப்புரத்தை யெரித்த என்னையனாகிய அருணாசலக்கடவுளது கிருபாநோக்கமென்னும் மேகம் தமது மகிமையைப் பக்தியுடனே துதிக்கும் அடியாரது உயிரென்னும் பயிர் வாட்டமடையாமல் இப்பூமியில் ஆனந்தமென்னும் வெள்ளத்தை நிறப்பும் எ-று. 101

அருணகிரி யந்தாதி யழகுவெண்பா நூறும்
கருணையுடன் கற்றோரைக் கண்டு—அருணையண்ணல்
வீறான பொன்னுலகில் வேந்தனுக்கு மாற்றல்
மாறாமல் வைப்பார் மகிழ்ந்து.

இ-ள். அருணகிரியந்தாதி யென்னும் அழகு பொருந்திய வெண்பா நூறையும் பக்தியோடு வாசிப்பவர்களைப் பார்த்து அருணாசலக்கடவுள் சந்தோஷித்து மேன்மை பொருந்திய தேவலோகத்தையாளுந் தேவேந்திரனுக்குச் சமமாக தேவலோகத்தில் எப்போதும் நீங்காமல் வைப்பார் எ-று. 102

அருணகிரியந்தாதி மூலமும்-உரையும்

முற்றிற்று.

பூமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1938.